# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, ஸம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, ஸம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 31/2007

**ஸம் நம்பிக்கைப்பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"ஸம் நம்பிக்கைப்பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான நம்பிக்கைப்பொறுப்பொன்று அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்போடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதற்கு முன்னர் கொழும்பில் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக் கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களை யும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ஸம் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நம்பிகைப்பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸம் நம்பிக்கைப்பொறுப்பின் தற்போதைய நம்பிக்கைப்பொறுப்புச் சபையின் உறுப்பினர்களாக உள்ள அத்த கைய ஆட்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களு மான அத்தகையோரான வேறு ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஸம் நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதலும் வேண்டுமென்ப துடன் அது அப்பெயர் கொண்டு, வழக்குத் தொடரலாமென் பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம், அத்து டன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்த வும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) முஸ்லிம்களின் கல்வி, அறிவு முன்னேற்றத்தை மேம்படுத்தல் மற்றும் தேவையிலுள்ள முஸ்லிம் கற்றறி வாளர்களுக்கு புலமைப் பரிசில்களையும், வேறுவகை யிலான நிதி உதவிகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ஆ) வறிய முஸ்லிம்களுக்கான வீடுகளையும் மற்றும் முஸ்லிம்களுக்கு கல்வி நிறுவகங்கள், பள்ளிவாசல்கள், மருத்துவமனைகள், தொழிற்பயிற்சி நிலையங்களை நிர்மாணித்தலும் பேணுதலும் ;

(இ) கல்வியிலும் வேறு செயற்பாடுகளிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு உதவுதல் ;

(ஈ) முஸ்லிம் தொடர்பாக அனர்த்தங்கள் இயற்கைப் பேரிடர்கள் காரணமாக ஏற்படும் வறுமை நிலைக்கும் இடருக்கும் நிவாரணமளிப்பதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும், அத்தகைய நடவடிக்கைகளுக்கு உதவுதலும் பொறுப்பேற்று நிறை வேற்றலும் ;

(உ) வறிய முஸ்லிம் மக்களுக்காக நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஊ) முஸ்லிம் மக்களிடையே இஸ்லாமியக் கல்வி நூல்கள், பருவ வெளியீடுகள், சஞ்சிகைகளைத் திரட்டல், வகுப்பீடு செய்தல், மொழி பெயர்த்தல், அச்சிடல், வெளியிடல், பகிர்ந்தளித்தல் ; அத்துடன்

(எ) முஸ்லிம் மக்களிடையே இன, தேசிய, சர்வதேச புரிந்து ணர்வையும், மத ஒற்றுமையையும், நல்லெண்ணத்தை யும், சமாதானத்தையும் வளர்ப்பதற்கான செயற்பாடு களை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும், அத்தகைய நடவடிக்கைகளுக்கு உதவுதலும் ஆதரித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவற்கு அவசியமானவாறான வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், கூட்டுத்தாபனத்தின் பணங்களை முதலீடுசெய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்துவதற்கும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறுவதற்கும், தேவையான அலுவர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனத்துக்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.

**5**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களென இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து பயனுறுவதாக கருதப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் தெரிவு செய்யப்படக்கூடியவாறான ஐவருக்குக் குறையாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களையும் கொண்ட (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைத்துக்குழு ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று பதவிவகிக்கும் நம்பிக்கைப்பொறுப்பின் உறுப்பினர்கள் முதலாவது குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் குழு உறுப்பினர்களை நியமித்தல் குழுவினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறுபட்ட அலுவலர்கள் முகவர்கள் மற்றும் சேவையாளர்களினதும் கடமைகளின் நடாத்துகைக்காகவும் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கும் பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் பொதுக் கூட்டமெதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத உறுப்பினர்களின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு குழுவினால் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் ஏதேனும் விதி ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேபோன்ற முறையில் அவை மாற்றப்படலாம் திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியம், பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று நம்பிக்கைப்பொறுப்பில் வரவுவைக்கப்பட்டிருக்கும் சகல நிதிகளும் அத்திகதியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டம் தொடங்கியதன் பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகவுள்ள சகல நிதித்தொகைகளும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படும் ஏதேனும் நன்கொடைகள் அல்லது வெகுமதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் உறப்படும் செலவுகளைச் செலுத்துவதற்காக நிதியத்தில் வரவுவைக்கப்பட்டிருக்கும் சகல நிதித்தொகைகளையும் பயன்படுத்துதல்.

கணக்காய்வுகளும், கணக்குகளும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப்பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று நம்பிக்கைப்பொறுப்புக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று நம்பிக்கைப்பொறுப்புக்கு வருமதியான எல்லாக் கடன்களும், செலுத்தப்படற்பாலனவையான உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். குழுவினால் குறித்துரைக் கப்படுகின்றவாறு அது மாற்றப்படலாம். குழுவின் அனுமதியுட னும், குழுவின் உறுப்பினர்கள் இருவரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனங்கள் எதிலும் பொறிக்கப்படலாகா தென்பதுடன், தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அவர்களில் இருவர் அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைத்தலின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புகளையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படலாகாது. அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட நிறுவனங் கள் அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அவற்றின் விதி களினால் தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கையளிக் கப்படலாம். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத் தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்புக்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் மக்கட்குழு அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ, பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தில் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்